1968 பிப்ரவரி 28]

பஸ்களை விடுகிருர்களே, அதுபோன்று அரசாங்கமும் சர்க்கார் துறையில் பஸ் விடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : பொதுவாக எல்லாச் சிறப்பு நிகழ்ச்சிகளின்போதும், விழாக்களுக்கும்கூட அவ்வப்பொழுது அரசாங்க பஸ்கள் விடப்படுகின்றன. அதைப்பற்றிய கோரிக்கைகளை பொது மக்கள் வைத்தால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல், குற்றாலம், உதகமண்டலம் போன்ற வாசஸ்தலங்களுக்கு அதிகமாகப் பிரயாணிகள் போகக்கூடிய வகையில், உற்சாகப்படுத்துகின்ற முறையில் அரசாங்கம் துரித பஸ்களில், போகவர, ரிட்டர்ன் டிக்கட் கொடுப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : அதுபற்றி யோசிக்கலாம்.

*** 94. வினு—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடை யளிப்பாரா—

திருச்சிராப்பள்ளிக்கும் பழனிக்குமிடையே அரசாங்க பஸ் விடும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, பொதுவாக திருச்சி யிலிருந்து பழனி செல்வது என்றால் இடம் கிடைக்காமல் பயணிகள் கஷ்டப்படுகிருர்கள். ரிசர்வ் செய்தவர்களுக்குக்கூட சில சமயங்களில் இடம் கிடைக்காமல் கஷ்டப்படுகின்ற காரணத்தினுல் அரசாங்க பஸ்கள் அங்கு விடுவதற்கு அரசாங்கம் புனராலோசனை செய்ய முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : தஞ்சையிலிருந்து பழனிக்கு செல்லுகின்ற பேருந்துகள் திருச்சி மார்க்கமாகச் சென்று கொண்டிருக்கின்றன. அதிகம் தேவையென்று இயக்குநர் அவர்கள் பரிசீலனை செய்வார்களானுல் அதைச் சர்க்கார் கவனிக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு ஒரே பஸ் கூடுதல் வசதிகளுடன் குறைந்த சீட்டுகளுடன் உள்ள ஒரு பஸ்ஸை விடுவதற்கு முந்தைய அரசு திட்டமிட்டிருந்தது. அதை இந்த அரசாங்கம் மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : இந்தக் கேள்வி மூலக் கேள்வி யில் இடம்பெறவில்லை. இதில் உறுப்பினர் அவர்களுக்கு அக்கறை இருக்குமானுல் தனியாகக் கேள்வி போட்டால் அவருக்கும் நல்லது எல்லோருக்கும் நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி திருச்சி-யிலிருந்து பழனிக்கு அரசாங்க பஸ் விடுவதைப்பற்றியது. ஆகவே அதைப்பற்றிய கேள்விகளை மட்டும் கேட்கவேண்டும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : பழனியிலிருந்து தஞ்சைக்கு பஸ்விடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனுல் விடப் படாமல் இருக்கிறது. ஆகவே அதை விரைவிலே விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : அதைப்பற்றி உறுப்பினர் நினைவுறுத்தி எழுதினுல் கவனிக்கலாம்.

திரு கு. கிருஷ்ணமூர்த்தி : பழனிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்துபோய்க்கொண்டிருக்கிறார்கள். திருச்சியிலிருந்து, சேலத்திலிருந்து மதுரையிலிருந்து, கோவையிலிருந்து சர்க்கார் பஸ்கள் விட உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உறுப்பினர் கேட்கின்ற அளவில் பக்தர்களிடமிருந்து கோரிக்கை எதுவும் வரவில்லை.

திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கம்

*** 95 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பால் கூட்டுறவு சங்கத்தில் பாலைக் குளிர்ப்பதனம் செய்யும் இயந்திரம் எந்த தேதியிலிருந்து இயங்கி வருகிறது ?

(இ) மேற்படி சங்கத்தில் நாள் ஒன்றுக்கு எவ்வளவு லிட்டர் பால் குளிர் பதனம் செய்யப்பட்டு விற்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) பாலைக் குளிர்பதனம் செய்யும் இயந்திரம் 13—8—1967 அன்று செயல்படத் தொடங்கியது.

(இ) இச் சங்கத்தின் அன்றாடம் 1,250 லிட்டர் பால் குளிர்பதனம் செய்யப்பட்டு பக்குவப்படுத்தப்படுகிறது.

*** 96 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்திற்குப பால் குளிர்பதனம் செய்யும் கட்டிடத்தை எவ்வளவு ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இறுதி மதிப்பீட்டுக்குப் பின்னரே மொத்தச் செலவினை மதிப்பிட முடியும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்தில் தற்பொழுது அமைக்கப்பட்டிருக்கிற குளிர்பதனம் செய்யும் இயந்திரத்தின் மூலமாக நாளொன்றுக்கு பத்தாயிரம் லிட்டர் பாலை தயார் செய்யவேண்டும் என்று திட்டமிட்டு இப்பொழுது நாள் ஒன்றுக்கு 1,200 லிட்டர் பால்தான் தயாரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் இதுவரையில் அங்கே பாலை அதிகமாகக் குளிர்பதனம் செய்வதற்கு முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை. விரைவிலே 10,000 லிட்டர் பாலை தயாரிக்கிற அளவுக்கு முயற்சி எடுத்து நிர்வாக அமைப்பிலே குறையிருந்தால் மாற்றியமைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தற்பொழுது 1,250 லிட்டர் பால் நாளொன்றுக்குப் பக்குவப்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இன்னும் ஒரு 500 லிட்டர் பக்குவப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளலாம். தற்பொழுது 16 பால் கூட்டுறவு சப்ளை யூனியன்கள் மூலம்தான் கிடைக்கிறது. இவற்றைப் பெற்று இந்தக் காரியம் நடைபெறுகிறது. இன்னும் பால் சப்ளை யூனியன்களை விஸ்தரிப்பதற்கும், ஊக்குவிப்பதற்கும் வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சொஸைடிகள் அதிகமாகிற நிலையில் தான் அது அதிகமாகும். இந்தச் சாதனம் ஒரு நாளில் 6,000 லிட்டர் முழு அளவில் செய்யலாம். அதற்கு முயற்சி செய்கிறோம். நிர்வாகக் குறை ஒன்றும் இல்லை. இப்பொழுதுதான்